# 24

# நபி ச வழி நடப்போம்

## (கல்வி தொடர்பான ஹதீஸ்கள்)

இஸ்லாம் கல்விக்கு அளப்பரிய முக்கியத்துவத்தை வழங்குகின்றது. அறிவின் சிறப்பையும் அறிஞர்களின் அந்தஸ்தையும் அது சிறப்பித்துக் கூறுகிறது. கல்வியின்பால் கரிசனை காட்டுமாறு மனிதனைத் தூண்டுகின்றது. மனிதனின் கல்விக் கண்களைத் திறந்துவிட முயற்சிக்கின்றது; கல்வி பெறுவதற்கான பல்வேறு வழிமுறைகளைக் காண்பிக்கின்றது. ஏனெனில், மனிதன் பெற்றுக் கொள்ளும் அறிவின் அடியாகவே அவனது ஈமான் வலுவடைகின்றது. அதுவே அவனது உள்ளத்தை இயக்குகின்றது. இறையச்சத்தை ஏற்றுள்ள ஒவ்வொருவரும் கல்வியைத் தேட வேண்டும் என்பது அதன் உயர்ந்த குறிக்கோள்களில் ஒன்றாக அமைந்துள்ளது.

இங்கு நாம் கல்வி தொடர்பான ஐந்து ஹதீஸ்களைத் தேர்ந்தெடுத்துக் கற்போம்.

عن أبي هريره رضي الله عنه أنّ النبي صلى الله عليه وسلم قال:
أَفْضَلُ الصَّدَقَةِ اَنْ يَتَعَلَّمَ الْمَرْاُ عِلْماً ثُمَّ يُعَلِّمَهُ أَخَاهُ المُسْلِمَ
(ابن ماجه)

"அறிவைக் கற்று, பின்னர் அதனைச் சகோதர முஸ்லிமொருவருக்குக் கற்றுக் கொடுப்பது உயர்ந்த ஸதகாவாகும்."

(அறிவிப்பவர்: அபூ ஹுரைரா ரலி ஆதாரம்: இப்னுமாஜா)

அறிவைக் கற்பது இறைவனை நெருங்குவதற்கான ஒரு வணக்கமாகவும் இறையச்சமிக்க ஒரு செயலாகவும் அமைகின்றது. அவ்வாறே அதனைக் கற்றுக் கொடுப்பது உயர்ந்த தர்மமாகவும் அமைந்து விடுகின்றது.

عن أبي أمامة الباهلي قال النبي صلى الله عليه وسلم: إِنَّ اللهَ وَمَلاَئِكَتَهُ وَأَهْلَ السَّمَاوَاتِ وَالأَرْضِ حَتَّى النَمْلَةُ فِيْ جُحْرِهَا وَحَتَّى الْحُوْتُ لَيُصَلُّوْنَ عَلَى مُعَلِّمِي النَّاسَ الخَيْرَ (الترمذي)

''அல்லாஹ்வும், அவனுடைய மலக்குகளும், வானம் பூமி ஆகியவற்றிலுள்ள படைப்பினங்களும் ஏன் புற்றிலிருக்கும் எறும்பு, கடலிலுள்ள மீன் போன்ற அனைத்தும் மனிதர்களுக்கு நல்லதைப் போதிக்கின்றவர்களுக்காகப் பிரார்த்தனை செய்கின்றன.''

(அறிவிப்பவர்: அபூ உமாமா அல் பாஹிலிய்யி **ரலி**, ஆதாரம்: திர்மிதி)

அறிவைப் போதிப்பவர்களை இஸ்லாம் பாராட்டுகின்றது. அவர்கள் அல்லாஹ் வுக்கு நெருக்கமானவர்கள்; அவர்களுக்காக மலக்குகள் உட்பட எல்லாப் படைப்புக்களும் பிரார்த்திக்கின்றன. ஏனெனில், அவர்கள் மக்களை நல்வழிப் படுத்துகின்றனர்; அவர்களை நரகின் வேதனையிலிருந்து காப்பாற்றி விசாலமான சுவனத்தின்பால் அழைத்துச் செல்கின்றனர்.

عن أبي بكرة قال: سَمِعْتُ النَّبِيَّ صلى الله عليه وسلم يَقُوْلُ أُغْدُ عَالِماً أَوْ مُتَعَلِّماً أَوْ مُسْتَمِعًا أَوْ مُحِباًّ وَلاَ تَكُنِ الْخَامِسَةَ فَتَهْلِكَ (الطبراني)

''அறிஞனாக அல்லது கற்பவனாக அல்லது செவிமடுப்பவனாக அல்லது கல்வியை நேசிப்பவனாக இரு. ஐந்தாமவனாக இருந்துவிடாதே.இன்றேல் அழிந்துவிடுவாய்''

(அறிவிப்பவர்: அபூ பக்ரத் **ரலி** ஆதாரம்: தபரானி)

கல்வியைப் பெற்றுக் கொள்வதற்காக சமுதாயத்தைத் தூண்டிய நபி **ஸல்** அவர்கள், மனிதன் தனது வாழ்வின் ஒவ்வொரு நிலையிலும் அறிவுடன் தொடர்புற்றவனாக இருக்க வேண்டும் என்பதை வலியுறுத்தியுள்ளார்கள்.

عَنْ أَبِي بَرْزَةَ الأَسْلَمِي قَالَ: قَالَ رَسُوْلُ اللهِ صلى الله عليه وسلم
مَثَلُ الَّذِي يُعَلِّمُ النَّاسَ الخَيْرَ وَيَنْسَى نَفْسَهُ مِثْلَ الفَتِيْلَةِ
تُضِيْئُ لِلنَّاسِ وَتُحْرِقُ نَفْسَهَا. (الطبراني)

``மக்களுக்கு நல்லவற்றைக் கற்றுக் கொடுத்துவிட்டுத் தன்னை மறந்திருப்பவர் விளக்கின் திரிக்கு ஒப்பானவர். அது மக்களுக்குப் பிரகாசத்தைக் கொடுக்கிறது. ஆனால், தன்னைத் தானே அழித்துக் கொள்கிறது.''

(அறிவிப்பவர்: அபூ பரஸா **வ** , ஆதாரம்: தபரானி)

கற்றவர் பிறருக்குப் போதிப்பவராக மாத்திரம் இருக்கக் கூடாது. அவற்றைத் தன் வாழ்வில் எடுத்து நடப்பவராக இருக்க வேண்டும். தனது வாழ்வில் அதனைப் பின்பற்றாமல் பிறருக்குப் போதிப்பவர் தன்னை அழிவுக்குட்படுத்திக் கொண்டவர் போலாவார்.

عن ابن عباس رضى الله عنه،
أَنَّ رَسُوْلَ اللهِ صلى الله عليه وسلم قَالَ:
تَنَاصَحُوْا فِي الْعِلْمِ فَإِنَّ خِيَانَةَ أَحَدِكُمْ فِي عِلْمِهِ أَشَدُّ مِنْ
خِيَانَتِهِ فِي مَالِهِ وَإِنَّ اللهَ سَائِلَكُمْ يَوْمَ الْقِيَامَةِ (الطبراني)

``கல்வி தொடர்பான விடயங்களில் நீங்கள் ஒருவருக்கொருவர் பரஸ்பரம் தூய்மையாக நடந்துகொள்ளுங்கள். உங்களில் ஒருவர் தனது செல்வத்தில் செய்கின்ற மோசடியை விட அறிவில் செய்கின்ற மோசடி மிகப் பாரதூரமானது. நிச்சயமாக அல்லாஹ் மறுமையில் உங்களை விசாரிப்பான்.''

(அறிவிப்பவர்: இப்னு அப்பாஸ் **வ**, ஆதாரம்: தபரானி)

இஸ்லாம் எல்லாவிதமான மோசடிகளையும் வன்மையாகக் கண்டிக்கிறது. அதனை நயவஞ்சகனுக்குரிய பண்பெனச் சுட்டிக் காட்டுகின்றது. அவற்றுள் மிகவும் கொடியது அறிவு சார்ந்த விடயங்களில் செய்யும் மோசடி ஆகும் எனக் குறிப்பிட்டுச் சொல்கின்றது.

மேலே நாம் கற்ற நபிமொழிகளினூடாக, கல்விக்கும் அதனைக் கற்றவர்களுக்கும் அதனைப் போதிப்பவர்களுக்கும் இஸ்லாம் உயர்ந்த கண்ணியத்தை வழங்குகின்றது. அவர்களது ஒவ்வொரு முயற்சியையும் பாராட்டுகின்றது. அவர்களுக்கு உலகில் சிறப்பான அந்தஸ்தையும் மறுமையில் நற்கூலியையும் வழங்குகின்றது. அறிவில் காட்டும் அசிரத்தை, அதில் செய்யும் மோசடி என்பவற்றைக் கண்டிக்கிறது, தண்டனைக்குரிய குற்றமாகவும் சுட்டிக் காட்டுகின்றது.

எனவே, நாமும் ஆர்வத்தோடு கல்வி கற்று அதன்படி ஒழுகி, அதனைப் போதித்து இறைவனிடம் உயர்ச்சி பெற முயற்சிப்போம்.

**பயிற்சி:**

1. சிறந்த ஸதகா என நபி ஸ அவர்கள் எதனைக் குறிப்பிட்டார்கள்?
2. நற்போதனை செய்வோருக்குக் கிடைக்கும் பாக்கியங்களை அட்டவணைப்படுத்துக?
3. நபி ஸ அவர்கள், 'விளக்கின் திரிக்கு' எதனை ஒப்பிட்டுக் காட்டினார்கள்? அதுபற்றி உமது கருத்துக்களை எழுதுக.
4. 'அறிவில் செய்யும் மோசடி மிகவும் பாரதூரமானது' என்பதிலிருந்து நீர் விளங்கிக் கொள்வது யாது?
5. செயற்பாடு:
   i) அறிஞர்களின் சிறப்பை எடுத்துரைக்கும் அல்குர்ஆன் வசனங்கள் இரண்டைப் பொருளுடன் எழுதிக் காட்சிப் படுத்துங்கள்.
   ii) மாணவர் மன்றத்தில் முன்வைப்பதற்காக 'அறிவின் மேன்மை' என்ற தலைப்பில் ஓர் உரையினைத் தயார் செய்யுங்கள்.